**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(20-02-2015 – 24-02-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 19-02-2016

**கடந்த கால வானிலை 16-02-2016 முதல் 18-02-2016 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 3-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-77 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 14-15 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 24-02-2016 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **20.02.16** | **21.02.16** | **22.02.16** | **23.02.16** | **24.02.16** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 3 | 3 | 0 | 0 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 52 | 52 | 52 | 52 | 52 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி**

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும்: பிப்ரவரி 20, 21 மற்றும் 24-ம் தேதியில் சில இடங்களில் இலேசான தூறல் வர வாய்ப்புள்ளது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி-காய்க்கும் பருவம்**

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- பருத்தியில் பூ உதிர்தலை தடுக்க 40 பி.பி.எம் என்.ஏ.ஏ. கலவையை (அதாவது லிட்டருக்கு 40 மி.கிராம் நாப்தலீன் அசிடிக் அசிட் என்ற அளவில்) விதைத்த 60 மற்றும் 90-வது நாட்களில் தெளிக்கலாம்.
- பருத்தியில் இலை பழுப்பு நோயைக் கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்+ டெட்ராசைக்ளின் கலவை 100g+ காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1250g/ha தண்ணிரில் கலந்து தெளிக்கவும். மேலும் இரண்டு அல்லது மூன்று முறை 10 நாள் இடைவெளியில் தெளிக்கலாம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.